70

70

### எல்லா ஹிந்துக்களுக்கும்

### பொதுவான

# பிரார்த்தனைகள்

1e

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 OCT 1948
MADRAS

தென் ஆப்ரிக்கா ஹிந்து மகா சபையார்
எல்லா ஹிந்துக்களுக்கும் பொதுவான பிரார்த்தனைகளாக
அநுசரித்து வரப்படுபவை இவை
(தபால் பெட்டி 2750—டர்பன்)



4/4

பிரசுரகர்த்தர்கள்

**நந்த்லால் மோஹன்லால் தக்கர்**

**[illegible]ன். எம். தக்கர் அண்ட் கோ.,**

[illegible]0, பிரின்ஸெஸ் ஸ்டிரீட்,

பம்பாய், 2

O2:417
N48
76898.

The Jupiter Press Ltd., Madras—8·48

# பிரார்த்தனை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 OCT 1948
MADRAS

பரம்பொருளாகிய அப்பெருமானுக்கு நமது வாழ்நாள் முழுமையும் பிரார்த்தனை ஆகுக !

—ஸ்ரீ அரவிந்த கோஷ்.

76898

**தென் ஆப்பிரிக்கா ஹிந்துமகா சபை**
தபால் பெட்டி 2750, டர்பன்

ஸங்கச்சத்வம் ஸம்வதத்வம் ஸம்வோமனாம்ஸி ஜானதாம்
ஸமானோ மந்த்ரஸ்ஸமிதிஸ் ஸமானி
ஸமானம் மனஸ்ஸஹசித்தமே ஷாம் |
ஸமானீவ ஆகூதிஸமானா ஹ்ருதயானி வஹ: ||
ஸமானாமஸ்து வோமனோ யதாவஸ்ஸு ஸஹாஸதி ||

*Samgachadhvam Samvadadhvam Samvomanamsi janatam*
*Samano Mantrassamithis Samani*
*Samanam manas Sahachitha mesham* |
*Samani Va Akuti Samana Hrudayani Vaha* ||
*Samanamastu Vo Mano yatha Vassu Sahasati* ||

ஒற்றுமையாய் இரு.
அன்புடன் பேசு.
எல்லா மனமும் ஒரே மாதிரி இருக்கட்டும்.
உமது பிரார்த்தனை பொதுவாகுக ;
உமது சங்கத்தின் கருத்து லக்ஷியங்களும் பொது ஆகுக ;
உமது தீர்மானமும் பொதுவாகுக ;
உமது செயல்களும் பொதுவாகுக ;
உமது உணர்ச்சிகளும் ஒன்றுகுக ;
உமது இருதயங்களும் ஒற்றுமைப்படட்டும் ;
உமது நோக்கங்களும் பொதுவாகுக ;
உமது ஒற்றுமை பூரணமாகுக.

—ருக்வேதம்.

# முகவுரை

தென் ஆப்ரிக்காவில் வாழ்ந்துவரும் ஹிந்து சமூகத்தினர் கல்வித்துறையிலும் ஆன்மிகத்துறையிலும் முன்னேற்றமடைந்து வருவது சந்தோஷத்திற்குரிய செய்தியாகும். திரண்ட செல்வமும் சரீர பலமும் ஒரு சமூகத்தினருக்கு நீண்ட வாழ்வையும், சாந்தியையும், சந்தோஷத்தையும் சாஸ்வதமான பெருந்தன்மையையும் அளியா. கலைச் செல்வத்தால் உண்டாகும் ஞானம், ஆன்மிக உணர்ச்சி இவைகளாலேதான் ஒரு சமூகத்திற்குச் சிறந்த பெருமை ஏற்படுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரிருந்தே ஹிந்து மக்களுக்கு இந்தப் பெரிய கலைச் செல்வம் ஒரு ஆஸ்தியாய் இருந்து வருகிறது. ஆகையினுல் இத்துறையில் அவர்கள் 'வழிகாட்டி'களாய் இருக்க வேண்டுவது நியாயமே.

அரசியற்காரணங்களும் நம் காலப்பொருளாதாரச் சமூக ஊழல்களும் ஒரு மனிதனுடைய இயற்கையான வாழ்க்கையைத் தடை செய்துவிட்டன. நிலையற்ற மனத்திற்கு ஒழுங்கான பக்தி நிறைந்த பிரார்த்தனையே மேலான சாந்தியை அளிக்கிறது. தூபதீப வாசனையோடு கூடிப் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட பரிசுத்தமான இடத்தில்தான் பிரார்த்தனையானது பிரபஞ்ச உணர்ச்சி, தெய்விக ஞானம், பேரின்ப சுகம், பூரண சாந்தி முதலியவற்றைத் தரும்; அங்கேதான் சாந்தமும் அமைதியும் ஆட்சி புரியும். பொதுப்பட்ட வாழ்க்கையிலும் தனியான முறையிலும் எல்லா ஹிந்துக்களுக்கும்

ஏற்ற முறையில் பிரார்த்தனைப் பாடல்கள் மிகவும் அவசிய மெனக் கருதப்படுகின்றன. அவர்களுடைய மதத்தின் தத்துவத்திற்கும் சமூக ஒற்றுமைக்கும் பிரார்த்தனை மிகவும் அத்தியாவசியம். எளிதாகவும் எல்லாரும் சுலபத்தில் தெரிந்துகொள்ளக் கூடியதாகவும் அது இருக்க வேண்டும்; வேதக் கருத்து நிறைந்து, இசையோடு பாடக் கூடியதாயிருத்தல் மேலானது. எக்காரணத்தை முன் னிட்டும் பொதுக்கூட்டத்தில் அது அதிக நீளமாயிருக்கக் கூடாது. பிரார்த்தனை நூலில் இவை யாவும் திருப்தி கரமாக இருக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.

தென் ஆப்ரிக்கா ஹிந்து மகா சபையின் தலைவராய் இருந்து வரும் டாக்டர் என். பி. தேசாய் அவர்கள் ஹிந்து மக்களிடையே பொதுவான ஒரு பிரார்த்தனை இருக்க வேண்டுமென்று அரும்பாடு பட்டு, அதற்கு வேண்டும் ஏற்பாடு செய்து வருகிறார். டர்பன் நகரில் ஒரு பிரார்த் தனை சங்கத்தை ஏற்படுத்தி, சென்ற இரண்டு வருஷகால மாக வாரந்தோறும் தவறாமல் தியானக் கூட்டத்தை அவர் நடத்தி வருகிறார். அதில் அவருக்கு நல்ல வெற்றி. ஆந்திர மகா சபையாரும் தெலுங்கு பேசும் மக்களுக்காக அதை அங்கே அநுசரித்து வரும் விஷயமானது நமக்கு உற்சாகத்தைத் தரக்கூடியதாயிருக்கிறது.

ஹிந்தி, தமிழ், தெலுங்கு, குஜராத்தி முதலிய பாஷைகளைப் பேசும் எல்லா ஹிந்து மக்களும் தங்களது ஓய்வு நேரத்தில் வாரக்கடைசியில் தங்களிடை ஆன்மிக அறிவும், சமூக முன்னேற்றமும், தேக வளர்ச்சியும் விருத்தியடைய எல்லாரும் பிரயத்தனம் செய்யவேண்டும். எல்லா இடத்திலும் தியானம் செய்யப் பிரார்த்தனை சங்கங் களை ஏற்படுத்த வேண்டும். அங்கே ஆண்களும் பெண்

களும், இளைஞரும் முதியரும், ஏழைகளும் பணக்காரர்களும் ஒன்றாகக் கூடி, சத்விஷயங்களைப் பற்றிப் பேசியும் பஜனை நடத்தியும் வாழ்க்கைத் தரத்லை உயர்த்தல் வேண்டும். தர்ம சிந்தனையுள்ள ஹிந்துக்கள் யாவரும் ஆயிரக்கணக்கில் இப்புத்தகத்தை வெளியிட்டு ஒவ்வொரு ஹிந்துவும் இதைப் படிக்குமாறு செய்வார்களென்று யான் கருதுகின்றேன். மதத்தின் தன்மை தெரியாது உறங்கிக் கிடக்கும் ஹிந்துக்களுக்கு இது மிகவும் துணை செய்யும். அவர்களும் தங்கள் மதத்தின் உண்மையை உணர்வர். சமூக ஒற்றுமைக்கும் இது முற்றும் உதவிபுரியும் என்பது திண்ணம்.

எல்லாச் சகோதர சகோதரிகளுக்கும் இப்புத்தகத்தை மட்டற்ற மகிழ்ச்சியுடன் யான் சிபாரிசு செய்கிறேன்.

31-7-'45. ரிஷிராம்.

# முன்னுரை

ஹிந்து சமூகத்தினர்க்கு ஒரு சிறந்த பிரார்த்தனை நூல் அவசியமென்று வெகு நாட்களாக நான் கருதி இருந்தேன். ஒரு கூட்டத்தில் எல்லாரும் ஒரே குரலுடன் பிரார்த்தனை செய்வது மிகவும் உயர்ந்தது. எல்லாராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பிரார்த்தனைப் பாடல் கிடையாததனாலேதான், பத்துப்பேர் சேர்ந்து ஒரே குரலுடன் பிரார்த்தனை செய்வது அபூர்வமாய் இருக்கிறது.

பொருத்தமான ஸம்ஸ்கிருதப் பாடல்களைத் தேர்ந்தெடுப்பதில் ஏராளமான சங்கடங்கள் இருக்கின்றன. பல விதமான பாகுபாடுகளையுடையது நமது மதம். எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி ஒன்று சேர்ப்பது செங்குத்தான ஒரு மலைமீது ஏறுவது போலாகும். பண்டித ரிஷிராம் அவர்களது தூண்டுகோலினாலும், ஹிந்து மதத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த அறிஞர் பலரது ஒத்துழைப்பினாலும் தென் ஆப்ரிக்கா ஹிந்து மகாசபையாரால் இந்தப் பொது ஜனப்பிரார்த்தனைப் பாடல்கள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன.

கொள்கையும் பாஷையும் வேறாக இருந்தபோதிலுங்கூட, எல்லா ஹிந்து சமூகத்தினரையும் ஒன்றாகச் சேர்ப்பதே இந்தப் பொதுஜனப் பிரார்த்தனையின் நோக்கமாகும். இந்நூலில் வந்துள்ள பிரார்த்தனைப் பாடல்கள் யாவும் நமக்குத் தெரியாதனவல்ல. பலர் இவற்றை நாள்தோறும் பாடி வருகின்றனர். வேதம், உபநிஷத்து முதலியவற்றி

லிருந்து அதிகமான பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. வேதங்கள் தெய்விகம் வாய்ந்தவை ; உலகத்தில் மிகப்பழமையான மதக்கிரந்தங்கள் அவையேயாம். ஐரோப்பிய நாகரிகம் தலைகாட்டா முன்னரே, ஹிந்துஸ்தானத்தில் (இந்தியாவில்) வாழ்ந்து வந்த மக்களுக்கு வேதப்பாடல்கள் நன்கு தெரியும். இப்பாடல்களின் தெய்விக சக்தியும் பழமையும் மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்குப் பயன்படுவனவாகுக.

பிரார்த்தனைப்பாடல்களைச் சும்மா ஒப்பிப்பதனாலேயே நாம் திருப்தியடையலாகாது என்று யான் நினைக்கிறேன். சும்மாப்பாடுவது மாத்திரம் பிரார்த்தனை ஆகாது. நமது உள்ளக்கருத்தைத் தெரியப்படுத்துவதே பிரார்த்தனையாம். கடவுளிடத்திலுள்ள நம்பிக்கையையும், அவர் மகிமையைத் தெரியப்படுத்தும் பாடலையும் நமது செயலிலும் காட்டுவோமாக !

தேவநாகரி லிபியில் பழக்கமில்லாதவர்களுக்காக ஸம்ஸ்கிருத பாடல்கள் அவ்வாறே தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. உச்சரிப்புக்கு உதவியாகத் தமிழின்கீழ் ஆங்கில லிபியிலும் ஒவ்வொரு பாடலும் எழுதப்பட்டிருக்கிறது.

76898

முடிவாக, தற்காலம் நடந்துவரும் பல திறப்பட்ட பிரார்த்தனைப் பாடல்களை இந்தப் பிரார்த்தனை நூல் மாற்றுவதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சாந்தி நிகேதன்,
81, ஒன்பதாவது அவென்யூ,
டர்பன்.

**என். பி. தேசாய்.**

தமக்குள் எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் தம்மையும் யார் பார்க்கிறாரோ அவர் ஒருவரையும் வெறுப்பதில்லை. அவர் எல்லார்க்கும் தொண்டு செய்து எல்லாரையும் நேசிக்கிறார்.

—ஈசோபநிஷத்து.

வாழ்க்கையில் பக்திமான்களுக்குப் பிரார்த்தனை தான் முக்கியமானது. துக்கத்தையும் சங்கடத்தையும் அது சாந்தப்படுத்துகிறது. அதே சமயத்தில் மனத்தையும் அது உயர்நிலைக்குக் கொண்டு வருகிறது. மக்களது வாழ்க்கையில் அதன் முக்கியத்தைப்பற்றி அதிகம் வற்புறுத்துவது அவசியமில்லை.

பிரமத்தையுணர்ந்து அதனுடன் இரண்டறக் கலந்த பிரம ஞானிகளும், கடவுளே இல்லையென்று கூறுகிற நாஸ்திகர்களும் ஆகிய இந்த இரு திறத்தாரும் பிரார்த்தனையை விரும்புவதில்லை.

இந்த இருதிறத்தார் தவிர மற்றைய மக்கள் தொகுதியில் வாழ்ந்துவரும் ஒவ்வொரு மனிதனும் பிரார்த்தனையின் முக்கிய தத்துவத்தை உணரவேண்டுவது அவசியம்.

—ஸ்வாமி சம்புதானந்தா, பிரார்த்தனை மகிமை.

## பிரார்த்தனை

1. ஓம் பூர்ப்புவஸ்ஸுவஹ |
தத் ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி |
தியோ யோனஹ் ப்ரசோதயாத் ||

*Om Bhur Bhuvah Suwah* |
*Tatsaviturvarenyam bhargo-devasya dhimahi* |
*Dhio yo nah prachodayat* ||

ஓ பரதேவதையே, எல்லாவற்றிற்கும் மூல காரணமே, ஞானத்திற்கும் பேரின்பத்திற்கும் ஆதாரமே, பிரபஞ்சத்திற்குச் சிருஷ்டி கர்த்தாவே! நாங்கள் உன்னிடம் கண்ணியமுள்ளவராக நடந்துகொள்ளுகிறோம்; உனது மேலான கிருபைக்குப் பாத்திரராகிறோம்; எம் மனத்திற்கு நீ நல்ல வழி காட்டியாக இருக்க; சிறந்த மார்க்கத்தை அடைய நாங்கள் உனது வழியைப் பின்பற்றுகிறோம்.

—**காயத்ரீ மந்திரம், வேதம்.**

2. ஓம் விச்வானி தேவ ஸவிதர் துரிதானி பராஸுவ |
யத் பத்ரம் தன்ன ஆஸுவ ||

*Om Vishvani deva savitar duritani parasuva* |
*Yad bhadram tanna asuva* ||

மேலான சிருஷ்டி கர்த்தாவான பரம்பொருளே!
உன்னிடம் நாங்கள் அடைக்கலம்.

உனது ஞான நோக்கத்தினால் தீமையை நீக்கி நன்மையைப் பாலிப்பாயாக.

3. ஓம் அக்னே நய ஸுபதா ராயே அஸ்மான்
விச்வானி தேவ வயுனானி வித்வான் |
யுயோத்யஸ் மஜ்ஜுஹு ராணமேனோ பூயிஷ்டாம்தே
நமஉக்திம் விதேம ||

***Om agne naya supatha raye asman***
***Vishvani deva vayunani vidvan |***
***Yuyodkyas majjuhu ranameno bhuyishtam te***
***Nama uktim vidhema ||***

ஞான ஒளியாயும் ஞான வடிவாயும் விளங்கும் கடவுளே! எம் எண்ணங்களையும் செய்கைகளையும் அறியும் பரமாத்துமாவே, வாழ்க்கையைச் சரியான முறையில் பயன்படுத்தக்கூடிய நெறியில் எம்மைச் செலுத்துவாயாக; கொடிய பாவத்திலிருந்து எம்மை விடுவி; எமது வணக்கமும் வாழ்த்தும் தெய்வமே! உனக்கு உரியனவாகுக.

4. நமஸ்தே ஸதே தே ஜகத் காரணாய
நமஸ்தே சிதே ஸர்வ லோகாச்ரயாய |
நமோ(அ) த்வைத தத்வாய முக்திப்ரதாய
நமோ ப்ரஹ்மணே வ்யாபினே சாச்வதாய ||

***Namaste Sate te jagat karanaya***
***Namaste chite Sarva lokashrayaya |***
***Namo-dvaita tatvaya mukti pradaya***
***Namo Brahmane vyapine Shashvataya ||***

பிரபஞ்சத்திற்கு மூல காரணமாய பரம்பொருளுக்கு நமஸ்காரம்! உலகத்திற்கெல்லாம் ஆதாரமாகிய அந்த அறிவான தெய்வத்திற்கு நமஸ்காரம்! மோக்ஷம் அளிக்கும் அத்துவைத சத்துப்பொருளாய் விளங்கும் அவருக்கு நமஸ்காரம்! எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கும் அப்பிரமத்திற்கு நமஸ்காரம்!

—மகாநிர்வாண மந்திரம்—பிரமம்.

5. த்வமேகம் சரண்யம் த்வமேகம் வரேண்யம்
த்வமேகம் ஜகத்பாலகம் ஸ்வப்ரகாசம் |
த்வமேகம் ஜகத்கர்த்ரு பாத்ரு ப்ரஹர்த்ரு
த்வமேகம் பரம் நிஸ்சலம் நிர்விகல்பம் ||

*Tvamekam Sharanyam tvamekam varenyam*
*Tvamekam jagatpalakam svaprakasham* |
*Tvamekam jagatkartru patruprahartru*
*Tvamekam param nischalam nirvikalpam* ||

ஓ எனது அடைக்கலமே!
ஓ எனது பற்றுப் பொருளே!

ஜோதி வடிவாய் உலகத்தைப் பாதுகாக்கும் உயர் பொருளே! உலகத்திற்கெல்லாம் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்தாவாய் விளங்குபவன் நீயே; மாற்றமற்ற நிச்சலப் பொருளாய் இருப்பவனும் நீ ஒருவனே.

6. வயம்த்வாம் ஸ்மராமோ வயம்த்வாம் பஜாமோ
வயம்த்வாம் ஜகத்ஸாக்ஷி ரூபம் நமாமஹ |
ஸதேகம் நிதானம் நிராலம்ப மீசம்
பவாம்போதி போதம் சரண்யம் வ்ரஜாமஹ ||

*Vayam tvam smaramo vayam tvam bhajamo*
*Vayam tvam jagat Sakshirupam namamah* |
*Sadekam nidhanam niralambamisham*
*Bhavam-bhodi potam sharanyam vrajamah* ||

பிரபஞ்சத்திற்கெல்லாம் சத்துப் பொருளாய் இருப்பவனே! அச்சத்துப் பொருளை நாம் தியானிக்கிறோம். மௌனமாக உன்னைப் பூஜிக்கிறோம்: எம்முடைய நமஸ்காரத்தை உனக்குச் செலுத்துகிறோம்; எல்லாவற்றிற்கும் மூலகாரணமாயும் ஆதாரமாயும் விளங்கும் அப்பொருளிடம் நாங்கள் அடைக்கலம். வாழ்க்கைச் சாகரத்தில் ஒரு வங்கம்போல இருப்பவனும் அவனே!

7. ஓம் அஸ்தோ மாஸத்கமய |
தமஸோ மா ஜ்யோதிர்கமய |
ம்ருத் யோர்மா (அ)ம்ருதம் கமய ||

*Om asato ma sad gamaya |*
*Tamaso ma jyotir gamaya |*
*Mrityorma mritam gamaya ||*

ஒ மேலான தத்துவ ஸ்வரூபியே! மாயையிலிருந்து சத்துப்பொருளைத் தெரிந்துகொள்ள எம்மை அழைத்துக் கொண்டு போவாயாக! அந்தகாரத்திலிருந்து ஜோதியைக் காண எம்மை அழைத்துக்கொண்டு போவாயாக. மரணத்திலிருந்து அமரத்துவமடைய எம்மை அழைத்துக் கொண்டு போவாயாக.

—பிரஹதாரண்யக உபநிஷத்.

8. ஸர்வே பவந்து ஸுகினஹ ஸர்வே ஸந்து நிராமயாஹ் |
ஸர்வே பத்ராணி பச்யந்து மாகஸ்சித் துக்கமாப்னுயாத் ||

***Sarve bhavantu Sukhinaha sarve Santu niramayah |***
***Sarve bhadrani pashyantu, ma kaschit dukkha mapnuyat ||***

ஒ பரம்பொருளான தேவதையே! உனது சந்நிதானத்தில் எல்லாரும் ஆநந்தமடையட்டும். துக்கத்திலிருந்து விடுதலையாகட்டும்; நன்மையை உணரட்டும்; ஒருவருக்கும் துக்கமில்லாமல் இருப்பதாக.

## சாந்தி பாடம்

ஓம் த்யௌஹ் சாந்திரந்தரிக்ஷம் சாந்திஹி,
ப்ருதிவீ சாந்தி ராபஹ
சாந்தி ரோஷதயஹ சாந்திஹ் வனஸ்பதயஹ
சாந்திர் விச்வேதேவாஹ் சாந்திர் ப்ருஹ்ம சாந்திஹி
ஸர்வம் சாந்திஹி சாந்திரேவ சாந்திஹிஸாமா சாந்திரேதி
ஓம் சாந்திஹ் சாந்திஹ் சாந்திஹி.

*Om Dyauh Shantirantariksham Shantih prithivi*
*shanti rapah*
*Shantiroshadhayah Shantihi vanaspatayaha,*
*Shantir vishvedevah Shantih brahma shantih*
*Sarvam Shanti shantireva shantih*
*Sama shantiredhi*
*Om Shantih Shantih Shantih.*

தேவலோகத்தில் சாந்தி, ஆகாயம் பூமண்டலம் எங்கும் சாந்தி, ஜல உலகம் சாந்தி, ஒஷதிகளுக்கும் தாவரங்களுக்கும் சாந்தி, எல்லாத் தேவதைகளுக்கும் சாந்தி. பிரமத்திற்குச் சாந்தி. எங்கும் சாந்தி! சாந்தி! அப்பேர்ப்பட்ட சாந்தியை நாம் அடைவோமாக!

—அதர்வவேதம்.

## யோகி—அரவிந்த கோஷ் அவர்களது பொறுக்கு மணிகள்

பரம்பொருளே, உமது அன்பு அபாரமானது; பெருந்தன்மையுடையது; தூய்மையானது; அதனல் அது எங்கள் அறிவிற்கு அதீதமானது. அது அளப்பரியது; முடிவற்றது; பயபக்தியுடன் உமது சந்நிதானத்தில் அதை யாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பலஹீனமானவர்களும் குழந்தைகளுங்கூட உம்மை அடையும்படி நீர் அதை அவ்வளவு இனிதாகச் செய்திருக்கிறீர்.

* * *

தெய்விகம் இல்லையேல், வாழ்க்கை துன்ப மயமானது; தெய்விகத் தன்மையுடன் கூடின் அது பேரானந்தமுடையது.

ஓம்

ஈச்வர் ஏக் ஹை, பரந்து பக்தலோக் அப்னீ சித்த வ்ருத்தி கே அனுஸார் பின்ன பின்ன நாம ரூபஸே உஸ்கீ உபாஸனா கர்தே ஹை யஹ் ஸ்ருதி கா வாக்ய ஹை | யஹ் ஸநாதன ஸத்ய ஜினலோகோம்நே பாயா ஹை, உன் பர் யஹ் ஜிம்மேவாரி ஆபடீஹை, கிவே அப்னே ஜீவன் மேம் ஸஹிஷ்ணுதா: ஆதர் ஔர் விச்வபந்துத்வகா விகாஸ்கரேம்.

கடவுள் ஒருவரே. தங்கள் மனோபாவனைக்குத் தகுந்த மாதிரிப் பக்தர்கள் பலவிதமாக அவரைத் தோத்திரம் செய்கின்றனர். இவ்வாறு வேதம் கூறுகிறது. இந்தப் பரந்த உண்மையை அறிந்தோர் தமது வாழ்நாளில் சகிப்புத்தன்மை, மரியாதை, சகோதரத்துவம் முதலிய உத்தமக் குணங்களை வளர்க்கும் பொறுப்பு வாய்ந்தவர்களாவர்.

—நாராயண மோரேசுவர் கரே.

# அநுபந்தம்

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலிசெய் கிற்பாம். 1

## சரஸ்வதி

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோல் கையும்—துடி இடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும்சொல் லாதோ கவி. 2

## முருகப் பெருமான்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

## எம்பெருமான்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னை அல்லால் இனியாரை நினைக்கேனே. 4

சங்கேந்தும் மலர்க்குடங்கைப் புத்தேளும்
மறைக்கோவும் தழல்கால் சூலம்
அங்கேந்தும் அம்மானும் தத்தமது
தொழிற்றலைநின்று ஆற்றச் செய்தோர்

பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப
இருமுனிவர் பணிந்து போற்றக்
கொங்கேந்தும் மணிமன்றுள் குனித்தருளும்
பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம். 5

ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனுள்
அசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
யாதிநா லேயும்வகுத்துச்
சைவமுத லாம்அளவில் சமயமும் வகுத்துமேல்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ உன்னைநா னணுகவும்
தண்ணருள் வகுக்கவிலேயோ
பொய்வளரும் நெஞ்சினர்கள் காணுத காட்சியே!
பொய்யிலா மெய்யர் அறிவில்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்றபொருளே!
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணு மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே! 6

நாரணன் என்னும் தேவும் நான்முகத் தவனும் முக்கண்
பூரணன் தானும் ஆகிப் புவிபடைத்து அளித்து மாற்றி
ஆரண முடிவும் தேரா அநாதியாய் நங்கட் கெல்லாம்
காரணன் ஆய மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம். 7

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவில் பணியச்செய் வாய்;படைப் போன்முத
லாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண் டேனும் விளம்பின்
உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே! 8

இப்படியன் அப்படியன் இந்நிலையன் என்றெவரும்
செப்பரிய ஞானச் செழுஞ்சுடரை—எப்பொழுதும்
வஞ்சமே செய்துபல வாழ்நாளை வீணாக்கும்
நெஞ்சமே ! சற்றே நினை. 9

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்சித்
தர்முனிவர் ஆதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணம்கற்
பனைகடந்த செல்வ மாகிக்
கருதரிய மலரின்மணம் எள்ளில்எண்ணெய்
உடலுயிர்போல் கலந்துளந் நாளும்
துரியநடு வூடிருந்த பெரியபொருள்
யாதுஅதனைத் தொழுதல் செய்வாம். 10

---

ஹிந்து மதத்தின் முக்கிய கிரந்தங்கள் :—

1 வேதங்கள் நான்கு :—ருக், ஸாம, யஜுர், அதர்வணம்.
2. பகவத்கீதை.
3. புராணங்கள்.
4. ராமாயணம், மகாபாரதம், பாகவதம்.
5. தர்ம சாஸ்திரம் : ஸ்மிருதி.
6. தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தங்கள்.

76898

*Copies obtainable from :—*

South African Hindu Maha Sabha,

P. O. Box 2750, Durban,

Natal, South Africa.